செய்தி வெளியீடு எண்: 221 நாள்: 17/4/17

பத்திரிகைச் செய்தி

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011–ன் படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% இட ஒதுக்கீட்டு இடங்களில் நலிவடைந்த பிரிவினர், வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஆதரவற்றவர் / எச்.ஐ.வி–ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புறவுத் தொழிலாளியின் குழந்தை / மாற்றுத் திறனாளிகள் போன்ற பிரிவின் கீழ்வுள்ள குழந்தைகளுக்கு அவரவர் இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் 2017 – 2018ம் கல்வியாண்டிற்கு சேர்க்கை பெறும் பொருட்டு www.dge.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் ஆன்லைனில் விண்ணப்பிக்க விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம். அந்தந்த ஒன்றியங்களிலுள்ள உதவி தொடக்க கல்வி அலுவலகங்கள், வட்டார வள மைய அலுவலகங்கள், திருப்பத்தூர் / வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகங்கள், வேலூர் மாவட்ட தொடக்க கல்வி அலுவலகம், காட்பாடி, அனைவருக்கும் கல்வி இயக்கம், மற்றும் அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்ட மாவட்ட அலுவலகங்கள் மற்றும் திருவண்ணாமலை மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் குடியிருப்புக்கான சான்றுகளான குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை, சாதி சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ், மாணவர்களின் சமீபத்தில் எடுத்த புகைப்படம் ஆகிய விவரங்களுடன் மேற்காணும் அலுவலகங்களில் இலவசமாக விண்ணப்பங்களை 20.04.2017 முதல் 18.05.2017 வரை இணைய தளம் வழியாக பதிவேற்றம் செய்யலாம். மேலும் தாலுக்கா அலுவலகங்களிலுள்ள இ–சேவை மையங்களிலும் மேற்காண் சேர்க்கை கோரும் பெற்றோர்கள் விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யலாம். பெற்றோர்கள் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களிலும் மற்றும் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளிலும் சேர்க்கை வழங்கும் மொத்த இடங்கள் மற்றும் 25% இடஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் இதர விவரங்கள் பொது மக்களுக்கு தெரியும் வண்ணம் தகவல் பலகையில் ஒட்டப்பட்ட விவரங்களை சார்ந்த அலுவலகங்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். இந்த நல்வாய்ப்பை பெற்றோர்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவிக்கலாகிறது.

இச்சலுகையை பெற தகுதியானவர்கள் :

1. நலிவடைந்த பிரிவினர் – ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு குறைவாகவுள்ளவர்கள்.
2. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் சிறப்பு பிரிவினர் – பிசி., பிசிஎம்., எம்பிசி., எஸ்சிஏ., எஸ்டி மற்றும் ஆதரவற்றவர்கள், மாற்று திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், எச்ஐவி–யால் பாதிக்கப்பட்டவர்கள், துப்புறவுத் தொழிலாளிகளின் குழந்தைகள்.

விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட தேவைப்படும் ஆவணங்கள்

1. இருப்பிடச் சான்றிற்கான ஆதாரம் (குடும்ப அட்டை மற்றும் ஆதார்அட்டை)
2. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர்க்கான சாதி சான்று மற்றும் இதர சான்று
3. ஆண்டு வருமானச் சான்று (இதர வகுப்பினருக்கு மட்டும்)
4. பிறப்புச்-சான்று

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

செ.ம.தொ.அ.நகல்
வேலூர்– 9.